by the Government to promote the welfare of the people, the number of patients receiving treatment and number of deliveries in government hospitals have increased significantly.

23. Though government hospitals are functioning effectively and benefiting the general public, there existed a situation where the poor had to approach private hospitals for specialized treatment of several life threatening diseases. Recognizing this situation and conscious of the fact that the poor would not be able to afford the expenses for private medical care, the Hon'ble Chief Minister has announced and implemented a noble scheme, named 'Kalaignar Insurance Scheme for Life Saving Treatments'. The insurance premium for this scheme has been fully borne by the Government. Under this very popular scheme, 1,40,70,367 families have enrolled as members so far. Under this scheme, in the very first four months till now, 24,495 beneficiaries have received free specialized treatment worth Rs.83 crores in 539 hospitals across the State.

24. The system of Activity Based Learning, successfully implemented in the schools of Tamil Nadu, has emerged as a model for the entire country. Experts from other States and several other countries have come to study its implementation in our State so as to replicate the same in their States and countries. Having successfully achieved universal primary education, this Government will strive towards universal secondary education by improving the quality of high schools under the national scheme for the development of secondary education.

25. In addition to providing education for all, it needs to be ensured that the education given is uniform and of high quality. With this objective, the Government has proposed to introduce the scheme for providing equitable education. The various existing syllabi in our State as well as other States were studied and their positive aspects identified and consolidated. Accordingly the Government decided to formulate a new, easy and common syllabus of high quality by incorporating the good features so identified and implement the same throughout the State. This Government is of the firm view that the introduction of equitable education system will remove the existing difficulties, if any, faced by students and parents on account of multiple boards of education and syllabi and it will also enhance the competitiveness of our students in various national level

2010 ஜனவரி 8]

சிறைச்சாலை இருந்த இடத்தில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

22. 'வருமுன் காப்போம்' திட்டத்தின்கீழ் மாநிலமெங்கும் இதுவரை 13,045 முகாம்கள் நடத்தப்பட்டு 1,26,73,884 பேர் பயனடைந்துள்ளனர். மாநிலமெங்கும் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள '108' இலவச அவசரகால மருத்துவ ஊர்திச் சேவை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசின் மக்கள் நலம் பேணும் இத்தகைய முன்னோடி முயற்சிகளின் பலனாக, அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையும் மகப்பேறுகளின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளன.

23. அரசு மருத்துவமனைகள் இவ்வாறு திறம்படச் செயல்பட்டு, பொதுமக்கள் பயனடைந்துவரும் நிலையிலும், உயிருக்கு ஆபத்தான பல கடும் நோய்களுக்கு ஏழை எளியோர் தனியார் மருத்துவமனைகளில் உயர் சிகிச்சை பெறவேண்டிய நிலை இருப்பதையும், அதற்கான செலவுகளை அவர்களால் மேற்கொள்ள இயலாது என்பதையும் உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' என்ற உன்னதத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகையை அரசே ஏற்றுச் செலுத்தியுள்ளது. மக்களிடையே மகத்தான வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1,40,70,367 குடும்பங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இத்திட்டத்தின்கீழ் முதல் நான்கு மாதங்களிலேயே இதுவரை 24,495 பயனாளிகளுக்கு ரூபாய் 83 கோடி செலவில் மாநிலமெங்கும் உள்ள 539 மருத்துவமனைகளில் இலவச உயர் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

24. தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் செயல்வழிக் கல்விமுறை நமது நாட்டிற்கே முன்னோடியாக விளங்கி வருகிறது. நாட்டின் பிற மாநிலங்களிலிருந்தும் பல வெளிநாடுகளிலிருந்தும் பல வல்லுநர்கள் இம்முறையைப் பார்வையிட்டுத் தத்தம் பகுதிகளிலும் இதனை நடைமுறைப்படுத்த முனைந்துள்ளனர். மாநிலத்தில் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஐந்து வருட ஆரம்பக் கல்வி கிடைக்கச் செய்யும் இலக்கை வெற்றிகரமாக எய்தியுள்ள இந்த அரசு, மத்திய அரசு அறிவித்துள்ள தேசிய இடைநிலைக் கல்வி மேம்பாட்டுத்